செ.வெ.எண்: 350 நாள்: 24/04/2010

# செய்தி வெளியீடு

## தமிழகத்தில் ஊராட்சித் துறையின் சிறப்பான செயல்பாட்டிற்கான தேசிய அளவில் இரண்டாவது இடம் – மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் விருது வழங்கினார்கள்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநிலங்கள் எவ்வாறு நிதிபகிர்வு, அதிகாரபகிர்வு, அலுவலர் பகிர்வு செய்துள்ளது என்பதை ஒவ்வொரு வருடமும் இந்திய பொது நிர்வாக நிறுவனம் (Indian Institute of Public Administration) என்ற அமைப்பு மதிப்பீடு செய்து, இந்தியாவில் உள்ள மாநிலங்களை வரிசைப்படுத்தி மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் துறைக்கு தெரிவித்து வருகிறது.

அதன்படி, அகில இந்திய அளவில் தமிழகம் கடந்த நான்கு ஆண்டு காலமாக முதல் ஐந்து இடங்களில் உள்ளது.

| | | |
|---|---|---|
| **2006–2007** | **ஆண்டு** | **4வது இடம்** |
| **2007–2008** | **ஆண்டு** | **முதல் இடம்** |
| **2008–2009** | **ஆண்டு** | **3வது இடம்** |
| **2009–2010** | **ஆண்டு** | **2வது இடம்** |

இன்று (24.04.2010) புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் தேசிய அளவில் 2009–2010ஆம் ஆண்டிற்கான இரண்டாவது நிலை விருதினை மாண்புமிகு பாரதப்பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களிடமிருந்து, தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பாக, மாண்புமிகு தமிழகச் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.சுரேஷ்ராஜன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9